# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணை மதிப்பீட்டுப் பரீட்சை - 2022

| தரம் - 8 | நாடகமும் அரங்கியலும் | நேரம் :- 2 மணித்தியாலம் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..........................................................................

### பகுதி I

*** எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01. நாடக ஆற்றுகைக்கு மிக அவசியமான விடயம்.
    1. மோதுகை  2. எழுத்துரு  3. கதைப்பின்னல்  4. சொல்லாடல்
02. நாடக எழுத்துரு எவ்வகை மூலகத்துள் உள்ளடங்கும்?
    1. அருவமூலகம்  2. உருவமூலகம்
    3. அருவுருவ மூலகம்  4. மேற்கூறிய யாவும் சரி
03. நாடக எழுத்துருவொன்றிற்கு உயிரோட்டம் கொடுப்பவன்.
    1. மேடை முகாமையாளர்  2. நெறியாளர்  3. தயாரிப்பாளர்  4. நடிகர்
04. பின்வருவனவற்றுள் ஆற்றுகைக் கலைவடிவம் அல்லாதது.
    1. இசை  2. நாடகம்  3. நடனம்  4. சிற்பம்
05. நாடக மோதுகையை எவ்வாறு அழைக்கலாம்?
    1. நாடகநெறி  2. நாடகமுரண்  3. நாடகபாடம்  4. நாடகசொல்லாடல்
06. குரற் பயிற்சியாக அமையக்கூடிய அரங்க விளையாட்டு.
    1. கரடியும் கிராமமும்  2. ஆடும் வீடும்
    3. நாராய் நாராய்  4. குருட்டு ஆட்டோ
07. குழந்தை ம.சண்முகலிங்கத்தின் பாடசாலை நாடகங்களுள் உள்ளடங்குவது.
    1. புழுவாய் மரமாகி  2. ஆடும் வீடும்
    3. நாராய்நாராய்  4. குருட்டு ஆட்டோ
08. நாடகத்தில் இரண்டு பாத்திரங்கள் உரையாடுவது எவ்வாறு அழைக்கப்படும்.
    1. சொல்லாடல்  2. மோடி  3. பாத்திரம்  4. கரு
09. “அரசனின் புத்தாடை” என்ற நாடகத்தினை எழுதியவர்.
    1. ம.சண்முகலிங்கம்  2. சி.ஜெய்சங்கர்
    3. வேலுசரவணன்  4. மாவை.நித்தியானந்தன்
10. நாடகமொன்றின் மிகப் பிரதானமான கலைஞன்.
    1 நாடக ஆசிரியன்  2. நடிகன்  3. தயாரிப்பாளர்  4. நெறியாளர்
11. “கண்டறியாத கதை நாடகத்தின் மிக முக்கியமான காட்சிப் பொருள்.
    1. தேன்கூடு  2. மரம்  3. தொலைநோக்கி  4. சப்பாத்து
12. உலகநாடகத்தினம் கொண்டாடப்படுவது.
    1. மார்ச் 27  2. ஏப்ரல் 17  3. ஜனவரி 17  4 மே 27
13. பாம்பைக் கண்டவுடன் ஒருவரிடம் ஏற்படும் உணர்வு.
    1. கவலை  2. மகிழ்ச்சி  3. வெறுப்பு  4. பயம்

14. நாடகத்தை வளர்ப்பதில் மிக முக்கிய பங்கு வகிப்பது.

1. முரண்  2. நடனம்  3. இசை  4. நகைச்சுவை

15. சட்டியும் குட்டியும், புழுவாய் மரமாகி நாடகங்கள் முறையே எழுதியோர்.

1. ம.சண்முகலிங்கம், சி.ஜெய்சங்கர்
2. மாவை.நித்தியானந்தன், ம.சண்முகலிங்கம்
3. வேலுசரவணன், ம.சண்முகலிங்கம்
4. மாவை.நித்தியானந்தன், சி.மௌனகுரு

16. சொல்லாடல் என்பதைக் குறிக்கும் வேறு பதம்.

1. உரையாடல்  2. நடித்தல்  3. பாடுதல்  4. ஆடுதல்

17. "பண்பும் பயனும்" எனும் நாடகம் எக்கதையினை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது.

1. சிட்டுக்குருவி  2. தளிர்களும் நிரல்களும்
3. வாழ்வேமாயம்  4. இளஞ்சிறார்கள்

18. நரம்புக்கருவிகளில் ஒன்று.

1. வீணை  2. மிருதங்கம்  3. தபேலா  4. புல்லாங்குழல்

19. புதிதளித்தலுக்கு அவசியமான திறன்களில் ஒன்று.

1. அழகு  2. வாசிப்புத்திறன்  3. கற்பனை  4. மனனஞ்செய்யும்திறன்

20. விழுமியப் பண்பு என்பதனுள் அடங்காதது.

1. உதவி செய்தல்  2. சண்டை பிடித்தல்
3. பெரியோரை மதித்தல்  4. விருந்தோம்பல்

(20 x 2 = 40 புள்ளிகள்)

## பகுதி II

**விரும்பிய ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

(01)
1. நாடக எழுத்துரு என்றால் என்ன.?
2. நாடக எழுத்துருவிலுள்ள மூலக்கூறுகள் யாவை?
3. நாடக எழுத்துருவொன்றினை எழுதும் போது கவனிக்க வேண்டிய அம்சங்கள் 4 தருக?

(2 + 6 + 4 = 12 புள்ளிகள்)

(02)
1. நடிகருக்கு வழங்கப்படும் அரங்கப்பயிற்சி 3 தருக?
2. அரங்க விளையாட்டுக்களை விளையாடுவதனால் விருத்தியடையும் திறன்கள் 4 தருக?
3. அரங்கப்பயிற்சியினால் நடிகன் பெறக்கூடிய பயன்கள் 5 தருக?

(3 +4 + 5= 12 புள்ளிகள்)

(03) 1. பாடசாலை அரங்கு எனப்படுவது யாது?

2. பாடசாலை மாணவர்களின் நாடகங்களில் பெரும்பாலும் காணப்படும் பிரச்சினைகள் 5 தருக?

3. பாடசாலை நாடகங்களில் காணப்படும் விழுமியப்பண்புகள் 4 தருக?

(3 + 5+ 4 = 12 புள்ளிகள்)

(04) 1. ''அரசின் புத்தாடை'' எனும் நாடகத்தினை எழுதியவர் யார்?

2. இந் நாடகத்தின் கருப்பொருள் யாது?

3. இந் நாடகத்தில் வருகின்ற பாத்திரங்கள் மூன்றினைத் தந்து அதன் இயல்புகளையும் தருக?

(3 + 3+ 6 = 12 புள்ளிகள்)

(05) பின்வருவனவற்றைப் பற்றி சிறு குறிப்பு எழுதுக.

1. அரங்கவிளையாட்டு
2. சிறுவர் நாடக ஆசிரியர்கள்
3. பாத்திரச்சித்தரிப்பு

(4 +4 + 4 = 12 புள்ளிகள்)

(06) 1. கதை என்றால் என்ன?

2. கதையின் வகைகளைத் தருக?

3. விழுமியம்சார் கதை ஒன்றை எழுதுக.

(3 +3 + 6 = 12 புள்ளிகள்)